**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 145 / 2023**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW25<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Dilipbabu |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 07th day of March, 2026.

**( A1 and A4 are absent, Petition filed and allowed )**

<u>சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**<u>முதல் விசாரணை :</u>**

நேரம் 12.00 மணி

நான் தற்போது காட்பாடியில் நீதித்துறை நடுவராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தின் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கு காலகட்டத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் கும்மிடிப்பூண்டியில் பணிபுரிந்து வந்தேன். கடந்த 11-08-2022 ஆம் தேதி SRMC

காவல் நிலைய ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் பேரில் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் 11-08-2022 கொடுத்த கடிதத்தின் பேரில் குற்ற எண் 453/2022 சட்டப்பிரிவு 342, 323, 365, 395 376D, 506(i) இ.த.ச வழக்கில் என்னை அடையாள அணிவகுப்பிற்கு செல்வதற்காக என்னை நியமனம் செய்தார். மேற்படி உத்தரவின் பேரில் நான் கடந்த 16-08-2022 ஆம் தேதி புழல் சிறையில் அடையாள அணிவகுப்பு நடத்துவதற்காக புழல் சிறைக்கு ஒரு கடிதமும் சாட்சி கமலா அவர்களுக்கு ஒரு அழைப்பாணையும் அனுப்பினேன். மேற்படி உத்தரவின் பேரில் கடந்த 18-08-2022 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு என்னுடைய அலுவலக உதவியாளர் திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடன் காலை 10.00 மணிக்கு புழல் சிறைக்கு சென்றேன். அங்கு சிறைக்கு வெளியே போலீசார் சாட்சி கமலாவை அழைத்து வந்திருந்தார்கள். அவரின் ஆதார் அட்டை மற்றும் இதர ஆவணங்களை பரிசோதித்து அவர் தான் சாட்சி கமலா என்று உறுதிசெய்தேன். பின்னர் சாட்சியை வெளியே இருக்க வைத்துவிட்டு நான் எனது அலுவலக உதவியாளருடன் சிறைக்கு உள்ளே சென்றேன். அங்கே 6 எதிரிகள் சூர்யா (எ) சூர்யபிரகாஷ், கருப்பய்யா, தினேஷ், கணேஷ், சந்தோஷ்குமார் மற்றும் சுபாஷ் ஆகியோரின் வாரண்டை பரிசீலனை செய்தேன். அதிலுள்ள அங்க மச்ச அடையாளங்களை பரிசோதித்து இவர்கள் தான் 6 எதிரிகள் என்று உறுதி செய்தேன். பின்னர் அடையாள அணிவகுப்பிற்கான இடத்தை நான் தேர்வு செய்தேன். புழல் சிறையில் அடையாள அணிவகுப்பிற்கான ரூமில் Oneway Mirror உள்ளது அதில் சாட்சிகள் எதிரிகளை பார்க்கமுடியும் எதிரிகள் சாட்சிகளை பார்க்கமுடியாது. மேலும் 6 எதிரிகள் அடையாள அணிவகுப்பிற்கு இவர்களுக்கு இணையான மற்றும் 12 சிறைவாசிகளை தேர்வு செய்தேன். அனைவரும் ஒரே உருவ அமைப்பு உடையவர்களை தேர்வு செய்தேன். பின்னர் 6 எதிரிகள் மற்றும 12 சிறைவாசிகளையும் ஒரே நேர்கோட்டில் மாற்றி மாற்றி நிற்கவைத்தேன். அதில் முதல் சுற்றில் எதிரி 1 சூர்யா என்பவர் முதல் இடத்திலும் 6 ஆம் எதிரி சுபாஷ் என்பவர் 3 ஆம் இடத்திலும், 4 ஆம் எதிரி கணேஷ் 6 ஆம் இடத்திலும்,3 ஆம் எதிரி தினேஷ்

9 ஆவது இடத்திலும், 5 ஆம் எதிரி சந்தோஷ்குமார் 12 ஆவது இடத்திலும் 2 ஆம் எதிரி கருப்பயா 16 ஆவது இடத்திலும் நின்றார்கள். பின்னர் எனது அலுவலக உதவியாளர் ஜெயக்குமார் என்பவரை சாட்சியை அழைத்து வர சொல்லி உத்தரவிட்டேன். சாட்சி கமலா அடையாள அணிவகுப்பு அறைக்கு வந்தவுடன் அவரிடம் சென்று எதிரிகள் எங்கு நிற்கிறார்கள் என கைகாட்டி அடையாளம் காட்டும்படி கூறினேன். பின்னர் சாட்சி முதல் சுற்றில் 1 ஆம் எதிரி சூர்யா, 4 ஆம் எதிரி கணேஷ், 3 ஆம் எதிரி தினேஷ், 5 ஆம் எதிரி சந்தோஷ்குமார், மற்றும் 2 ஆம் எதிரி கருப்பையாவை அடையாளம் காட்டினார். 6 ஆம் எதிரி சுபாஷை அடையாளம் காட்டமுடியவில்லை. பின்னர் சாட்சியை வெளியே இருக்க கூறி அலுவலக உதவியாளரிடம் கூறி அவர் வெளியே சென்றவுடன் உள் இருக்கும் சிறைவாசிகளிடம் எதிரிகளின் இடத்தை மாற்ற கூறியும் அவர்கள் அணிந்திருந்த சட்டையை மாற்றக் கூறி உத்தரவிட்டேன். 2 ஆவது சுற்றில் 3 ஆம் எதிரி தினேஷ் முதல் இடத்திலும், 5 ஆம் எதிரி சந்தோஷ்குமார் 5 ஆவது இடத்திலும், 6 ஆம் எதிரி சுபாஷ் 10 ஆவது இடத்திலும், 4 ஆம் எதிரி கணேஷ் 12 ஆவது இடத்திலும், 2 ஆவது எதிரி கருப்பையா 15 ஆவது இடத்திலும், 1 ஆம் எதிரி சூர்யா 18 ஆவது இடத்திலும் இருந்தார்கள். பின்னர் சாட்சியை அடையாள அணிவகுப்பு அறைக்கு வரக்கூறி உத்தரவிட்டேன். சாட்சியிடம் எதிரிகளை அடையாளம் காட்ட கூறினேன். 2 ஆம் சுற்றில் சாட்சி 6 எதிரிகளையும் அடையாளம் காட்டினார். பின்னர் சாட்சிகளை வெளியே இருக்கும்படி கூறி அவரை வெளியே அனுப்பிவைத்தேன். பின்னர் சிறைவாசிகளின் இடத்தை மாற்றி கூறியும், அவர்களின் மேல் சட்டையை மாற்றக்கூறி உத்தரவிட்டேன். அதனடிப்படையில் 3 ஆவது சுற்றில் 4 ஆவது எதிரி 1 ஆவது இடத்திலும், 2 ஆவது எதிரி கருப்பையா 4 ஆவது இடத்திலும் 6 ஆம் எதிரி சுபாஷ் 7 ஆவது இடத்திலும், 1 ஆம் எதிரி சூர்யா 10 ஆவது இடத்திலும், 5 ஆம் எதிரி சந்தோஷ்குமார் 13 ஆவது இடத்திலும், 3 ஆம் எதிரி தினேஷ் 17 ஆவது இடத்திலும் நின்றார்கள். பின்னர் சாட்சியை வரவழைத்து எதிரிகளை அடையாளம் காட்ட உத்தரவிட்டேன். 3 ஆவது சுற்றில் சாட்சி 6 எதிரிகளையும் அடையாளம் காட்டினார். பின்னர் எதிரிகளிடம் ஏதாவது

கூற விரும்புகிறீர்களா என்று கேட்டேன். எதுவும் இல்லை என்று கூறினார். பின்னர் வாரண்டை சிறை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்து என் பணியை நிறைவு செய்தேன். அடையாள அணிவகுப்பிற்கான அறிக்கை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் திருவள்ளூர் அவர்களிடம் சமர்பித்தேன். அதன் உண்மை நகலை விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தேன். அடையாள அணிவகுப்பு அறிக்கை **அ.த.சா.ஆ.45** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

SRMC காவல் ஆய்வாளரிடமிருந்து எனக்கு வந்த வேண்டுகோள் கடிதத்தில் 22-10-2021 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் காவல் ஆய்வாளர் எனக்கு நேரடியாக கடிதம் அனுப்பமாட்டார். தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவரிடமிருந்து எனக்கு உத்தரவு வரும் அதனடிப்படையில் நான் அடையாள அணிவகுப்பிற்கு சென்றேன். தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவரிடமிருந்து வந்த உத்திரவில் SRMC காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தில் நகல் இணைக்கப்பட்டுள்ளது. அதில் தேதி 22-10-2021 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சாட்சிக்கு அனுப்பிய அழைப்பாணையில் தேதி 16-08-2022 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அடையாள அணிவகுப்பிற்கு ஒரு எதிரியை அடையாளம் காட்ட அவருக்கு ஒத்த உருவமுடைய குறைந்தது 5 சிறைவாசிகளை நிற்கவைத்து அடையாளம் காட்டவேண்டும் என்றால் 1 எதிரிக்கு குறைந்தது 3 சிறைவாசிகளை நிற்கவைத்து அடையாளம் காட்டினால் போதும். நான் சொல்வது போல் 1 எதிரிக்கு 3 சிறைவாசிகளை நிற்கவைத்து அடையாளம் காட்டவில்லை என்றால் சரியல்ல. மொத்தம் 6 எதிரிகள் 12 சிறைவாசிகள் மொத்தம் 18 பேரை நிற்கவைத்தேன். சாட்சியிடம் அடையாள அணிவகுப்பை நடத்துவதற்கு முன்பு சாட்சியிடம் காலல் நிலையத்தில் வைத்து எதிரிகளை யாராவது அடையாளம் காட்டினார்களா என்று விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகளை காவல் ஆய்வாளர் காவல் நிலையத்தில் வைத்து ஏற்கனவே அடையாளம் காட்டியுள்ளார் என்றால் அதுகுறித்து எனக்கு எதுவும் தெரியாது. நான் முறையாக அடையாள அணிவகுப்பு

நடத்திவில்லை என்றாலும் ஆகவே நான் நடத்திய அடையாள அணிவகுப்பு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் அடையாள அணிவகுப்பு நடத்திய இடத்தில் போலீஸ் எங்குமில்லை என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். அடையாள அணிவகுப்பிற்கு சிறைவாசிகளை சக சிறைவாசிகள் மூலமாக அழைத்து வரவேண்டும் என்றாலும் சிறை கண்காணிப்பாளர் மூலமாக நான் அழைத்து வர செய்தது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஒவ்வொரு Attempt க்கும் ஒரு மெமோ தயார் செய்யவேண்டும் என்றால் சரியல்ல. அவ்வாறு செய்யவேண்டிய அவசியம் இல்லை. நான் சட்ட விதிமுறைகளை சரியாக பின்பற்றாமல் நான் நடத்திய அடையாள அணிவகுப்பு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.